பக்கங்கள்: 08 விலை : 20/-

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 16 வெள்ளிக்கிழமை 29.05.2020 கதிர் 73

# தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவின்றி மூன்றிலிரண்டு பெரும்பான்மை உறுதி!

## மஹிந்த அணி சூளுரை

கொழும்பு, மே 29

நாடாளுமன்றத் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் மூன்றிலிரண்டுக்கும் அதிகமாக வாக்குகளைப் பெற்று பலமான அரசை அமைக்கும்.

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

2

# மாவைக்கு எதிரான வழக்கு தள்ளுபடி

யாழ்ப்பாணம், மே 29

தமிழரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவுக்கு எதிராக யாழ்ப்பாணப் பொலிஸாரினால் தொடரப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தினத்தை, மக்களை கூட்டி யாழ்ப்பாணம், மார்டீன் வீதியில் அமைந்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைமையகத்தில் தலைவர் மாவை சேனாதிராசா தலைமையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டிருப்பதாகத்

2

# முன்னணிக்கு எதிரான வழக்கும் தள்ளுபடி

யாழ்ப்பாணம், மே 29

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியைச் சேர்ந்த 11 பேரையும் வீடுகளில் தனிமைப்படுத்தக் கோரி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு நீதிமன்றினால் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வார காலப் பகுதியில் மக்களை ஒன்று கூட்டி நிகழ்வுகளை மேற்கொண்டமை, தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறியமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளை முன்வைத்து கடந்த 17ஆம் திகதி பொலிஸார் யாழ்.நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

அதன்போது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர், செயலாளர் உட்பட 11 பேரை எதிர்வரும் 14 நாள்களுக்கு

2

# சஜித் குழுவுக்கு ரணில் அதிரடி; 99 பேரின் உறுப்புரிமை நீக்கம்!

## ஐ.தே.கட்சி மத்திய செயற்குழு இன்று ஏகமனதாகத் தீர்மானம்

கொழும்பு, மே 29

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சிக்கு சவால்விட்டு அக்கட்சியின் யாப்பு விதிகளை மீறி - கட்சியிலிருந்து வெளியேறி நாடாளுமன்றத் தேர்தலுக்காக ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்புமனுத் தாக்கல் செய்த சஜித் பிரேமதாஸ தலைமையிலான அணியினர் இன்று நடுத்தெருவில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது.

சிறிகொத்தவில் இன்று காலை கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு, சஜித் அணியினருக்கு இந்தத் தலையிடியைக் கொடுத்துள்ளது.

2

# கோட்டாவை சந்தித்தார் புதிய இந்தியத் தூதுவர்

கொழும்பு, மே 29

இலங்கைக்கான புதிய தூதுவர் கோபால் பாக்லே இன்று ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷவை மரியாதை நிமித்தம் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

தூதுவராகப் பதவியேற்ற பின்னர் முதன்முறையாக ஜனாதிபதியைச் சந்தித்த பாக்லே, ஜனாதிபதிக்கு நினைவுப் பொருள்களையும் வழங்கினார்.

இரு நாடுகளினதும் பரஸ்பர உறவுகள் குறித்தும் இங்கு பேசப்பட்டது.

# கலைப்புக்கு எதிரான மனுக்கள் மீது பூர்வாங்க விசாரணை திங்கள் முடிவு

கொழும்பு, மே 29

நாடாளுமன்றக் கலைப்புப் பிரகடனத்தை வெற்றும் வறிதானதுமாக அறிவிக்கும்படி கோரி உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பது குறித்த பூர்வாங்க விசாரணை திங்களன்று முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த மனுக்களை ஒட்டித் தாக்கல் செய்யப்பட்ட இடையீட்டு மனுக்களின் மனுதாரர்கள் தரப்பு சட்டத்தரணிகளின் வாதம் நேற்று முடிவடைந்தது.

ஐந்து நீதியரசர்கள் கொண்ட ஆயம், இடையீட்டு மனுதாரர்களின் வாதம் இன்று

2

# கூட்டமைப்புத் தலைவர்கள் இன்று மாலை கூடுகின்றனர்

கொழும்பு, மே 29

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில் இன்று மாலை 5 மணிக்குக் கூடுகின் றனர்.

இந்தக் கூட்டத்தில் பங்குபற்றுவதற்கு கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரனுக்கு தொலைபேசி மூலம் மாவை சேனாதிராஜா அழைப்பு விடுத்தார் எனத் தெரிய வருகின்றது.

சுமந்திரன் பங்குபற்றும் வழக்கு இன்று மாலை 3.40 மணிக்கு முடிவடைந்தமையை அடுத்து, இந்தச் சந்திப்புக்குச் சுமந்திரன் புறப்பட்டுச் சென்றார் என அறியவந்தது.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுத் தலைவர் மாவை சேனாதிராசா, ரெலோத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன் ஆகியோர் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# பொன்சேகாவிடம் ஒரு மணி நேரம் வாக்குமூலம்

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் சுமார் ஒரு மணித்தியாலம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

கடந்த மார்ச் மாதம் 18ஆம் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கொரோனா வைரஸ் தொற்று தொடர்பில் மக்கள் மத்தியில் அச்சம் ஏற்படும் வகையில் கருத்து வெளியிட் டார் என அவருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தநிலையில் இன்று வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலையான அவரிடம் சுமார் ஒரு மணித்தியாலம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது.

# ராஜபக்ஷக்களுடன் தேசிய அரசா? அதற்கான திட்டம் அறவே இல்லை

## அடித்துக் கூறினார் ரணில்

ராஜபக்ஷ அரசுடன் இணைந்து தேசிய அரசு அமைக்கும் எந்தத் திட்டமும் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது.

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சிறிகொத்தவில் இன்று நடைபெற்ற ஐ.தே.கவின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சிக்குத் துரோகம் இழைப்பவர்களுக்கு கட்சியில் இடம் வழங்க முடியாது.

கட்சியின் யாப்பை மதித்து அனைவரும் செயற்பட வேண்டும். சவால்களைத் தாண்டி எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெறுவதே எமது நோக்கமாக இருக்கின்றது - என்றார்.



# சொந்த ஊரில் ஆறுமுகனின் பூதவுடல் பெருந்திரளான மக்கள் நேரில் அஞ்சலி




ஹற்றன், மே 29

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமரர் ஆறுமுகம் தொண்டமானின் பூதவுடல் அவரது சொந்த ஊரான இறம்பொடை, வேவண்டனிலுள்ள பூர்வீக இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அமரர் ஆறுமுகனின் பூதவுடல் கொழும்பிலிருந்து ஹெலிக்கொப்டரில் அவரின் சொந்த ஊருக்கு இன்று பகல் எடுத்துச் செல்லப்பட்டது.

பூதவுடலை எடுத்துச் சென்ற ஹெலிக்கொப்டர், கம்பளையில் மைதானம் ஒன்றில் தரையிறங்கியது. பூதவுடல் அங்கிருந்து தரைவழியாக வேவண்டனுக்கு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது.

இதன்போது வீதியின் இரு மருங்கிலும் கூடியிருந்த பொது மக்கள், சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றி, அன்னாரின் பூதவுடலுக்கு கண்ணீர்மல்க மலர் துவி தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

இதேவேளை, பிரதான நகரங்களில் உள்ள கடைகள், வர்த்தக நிலையங்கள் அனைத்தும் மூடப்பட்டு வெள்ளைக் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன. மலையகத்தின் பெரும் பகுதிகள் இன்று சோகமயத்தில் ஆழ்ந்துள்ளன.

ஆறுமுகத்தின் பூர்வீக இல்லத்தில் பெருந்திரளான மக்கள் மற்றும் அரசியல்வாதிகள் அவரின் பூதவுடலுக்கு அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான முத்துசிவலிங்கம் பூதவுடலுக்கு அழுதவாறு அஞ்சலி செலுத்தினார்.




இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுடன் இதுவரை அடையாளம் காணப்பட்டவர்களில் 753 பேர் கடற்படை மற்றும் அவர்களுடன் நெருக்கமானவர்கள் என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. இதில் 717 பேர் கடற்படையினர் எனவும் சுகாதார அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிப்படைந்த கடற்படையினரில் இதுவரை 366 பேர் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறி யுள்ளனர் என்று கடற்படையின் ஊடகப் பேச்சாளர் லெப்டினன்ட் கொமாண்டர் இசுறு சூரிய பண்டார தெரிவித்தார்.

தற்போது 351 கடற்படையினர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும், அவர்களில் 66 பேர் வெலிசறையிலுள்ள கடற்படை பொது வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறுகின்றனர் எனவும் அவர் மேலும் கூறினார்.

## சஜித் குழுவுக்கு ரணில் அதிரடி: ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும்நாடாளுமன்றத்தேர்தலில் பிற கட்சிகளில் போட்டியிட வேட்புமனுக்களில் கையொப்பமிட்ட 99 பேரின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்த ஐ.தே.கவின் மத்திய செயற்குழு இன்றைய கூட்டத்தில்ஏகமனதாகதீர்மானித்துள்ளது.

சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் வேட்புமனுத் தாக்கல் செய்த ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் 99 பேருக்கு எதிராகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நபர்களின் கட்சி உறுப்புரிமையை இடைநிறுத்தும் முடிவைக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே எடுத்திருந்தார். இது தொடர்பில் சஜித் அணி உறுப்பினர்களுக்கு அவர் கடிதமும் அனுப்பியிருந்தார். ரணிலின் இந்த அதிரடித் தீர்மானத்துக்கே மத்திய செயற்குழு இன்று அனுமதியை வழங்கியுள்ளது.

## மாவைக்கு எதிரான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமக்கு புலனாய்வுத் தகவல் கிடைத்துள்ளதாகவும், அதற்கு தடை விதிக்குமாறு கோரியும் யாழ்ப்பாணப் பொலிஸார் யாழ்.நீதவான் நீதிமன்றில் கடந்த 17ஆம் திகதி வழக்கு தாக்கல் செய்து தடையுத் தரவைப் பெற்றிருந்தனர்.

இந்தவழக்குஇன்றுவெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள பட்ட போது, வழக்கைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான ஏதுவான காரணிகள் இல்லை எனத் தெரிவித்த நீதிவான், வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

## தமிழ், முஸ்லிம் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சியின் முரண்பாடுகள் தற்போது தீவிரமடைந்ததுள்ளன. ரணில் அணி, சஜித் அணி என்ற இருவேறுபட்டதரப்பினர்ஒன்றிணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிட்டாலும் வெற்றிபெற முடியாது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுக்கொண்ட வாக்குகள் பொதுத்தேர்தலில் அவர்கள் பெறும் வாக்கை முன்கூட்டியே தெரியப்படுத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் ஒன்றிணைந்து பெற்றுக்கொண்ட வாக்குகளைக் காட்டிலும் எதிர்வரும்பொதுத்தேர்தலில்குறைவான வாக்குகளைப் பெற்று படுதோல்வி அடையும். தமிழ், முஸ்லிம் கட்சிகளின் ஆதரவு இல்லாமல் ஸ்ரீலங்கா பொதுஜன முன் னணி பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மைக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்று பலமான அரசை ஸ்தாபிக்கும் .

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியடைந்த தேர்தல் தொகுதிகளில் பொதுத்தேர்தலில் வெற்றி பெறுவதற்கான திட்டங்கள் முறையாக வகுக்கப்பட்டுள்ளன. தமிழ், முஸ்லிம் மக்கள் இம்முறை ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணிக்கு ஆதரவு வழங்குவார்கள் என்ற நம்பிக்கை உள்ளது - என்றார்.

## முன்னணிக்கு எதிரான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீடுகளில் தனிமைப்படுத்தி 14 நாள்களின் பின்னர் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஐந்து பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரிகளுக்கு யாழ். நீதிமன்றநீதவான்ஏ.பீற்றர்போல்அன்றைய தினம் கட்டளையிட்டிருந்தார்.

மறுநாள் அந்தக் கட்டளைக்கு எதிராக நகர்த்தல் பத்திரம் ஒன்றைத் தாக்கல் செய்து, அந்தக் கட்டளையை மீளப்பெற வேண்டும்என மன்றிடம்கோரினார்கள்.

அன்றைய தினம் இரு தரப்பின் வாதங்களை அடுத்து, தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு கோரப்பட்டுள்ள 11 சந்தேகநபர்களுக்கும் நோய் அறிகுறிகள் உள்ளதாக மருத்துவ அறிக்கையை பொலிஸார்சமர்ப்பிக்கவில்லை. அதனால் நோய் அறிகுறி இல்லாதவர்களை வீடுகளில் தனிமைப்படுத்தினால் அவர்கள் மன உளைச்சலுக்கும் வேறு பல நோய்களுக்கும் உள்ளாகக் கூடும். அதனால் 11 பேரையும் தனிமைப்படுத்தும் கட்டளை, மன்றினால் மீளப்பெறப்படுகின்றது என்று நீதவான் ஏ.பீற்றர் போல், மீளாய்வு விண்ணப்பம்மீதுகட்டளைவழங்கினார்.

அதேவேளை வழக்கை இன்றைய தினத்துக்குஒத்திவைத்தார். இந்நிலையில் இந்த வழக்கு இன்றைய தினம் அழைக்கப்பட்டபோது, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் மன்றில் முன்னிலையானர்கள்.

இதனை அடுத்து நடைபெற்ற வழக்கு விசாரணையின்போது, வழக்கைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்ல ஏதுவான காரணிகள் இல்லாதமையால் அதனைத் தள்ளுபடி செய்து, வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள 11 பேரையும் வழக்கில் இருந்து முற்றாக விடுவித்து விடுதலை செய்தார் நீதிவான்.

# தொண்டமானுக்கு அஞ்சலி செலுத்தி மட்டுநகரில் கூட்டமைப்பு பதாகைகள்




மறைந்த அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான ஆறுமுகன் தொண்டமானுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் அஞ்சலிப் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டன.

கடந்த 26 ஆம் திகதி திடீர் மரணம் எய்திய இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ஆறுமுகன் தொண்டமானுக்குப் பல்வேறு தரப்பினரும் அஞ்சிலி செலுத்தி வருகின்றனர். அவ்வகையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் மட்டக்களப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் கி.துரைராசசிங்கத்தின் வழிகாட்டலில் அன்னாருக்கான அஞ்சலியைச் செலுத்தும் முகமாக அஞ்சலிப் பதாதைகள் மட்டக்களப்பு நகர் மற்றும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி மட்டக்களப்புக் காரியாலயம் என்பனவற்றில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ‘கொரோனா’ நோயிலிருந்து இதுவரை 754 பேர் மீண்டனர்

## 766 பேர் வைத்தியசாலைகளில்

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 09 பேர் குணமடைந்து இன்று வீடு திரும்பியுள்ளனர்.

தேசிய தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவினால் இன்று பிற்பகல் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி, தொற்றிலிருந்து பூரண குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 754 ஆக அதிகரித்துள்ளது.

நேற்றுப் புதிதாக அடையாளம் காணப்பட்ட 61 தொற்றாளர்களில் 26 பேர் கடற்படையினர் எனவும், 18 பேர் குவைத்திலிருந்து வந்து திருகோணமலையில் தனிமைப்படுத்தப்பட்டவர்கள் எனவும், 17 பேர் டுபாயிலிருந்து வந்து கிரகமவில் தனிமைப்படுத்தப் பட்டவர்கள் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுடன் இதுவரை அடையாளம் காணப்பட்ட 1,530 பேரில் தற்போது 776 பேர் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர். அத்துடன் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளை, மேலும் 75 பேர் வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்று சுகாதார மேம்பாட்டுப் பணியகம் அறிவித்துள்ளது.

## கலைப்புக்கு எதிரான

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 3.30 மணியளவில் முடிவுற்றபோதுவழக்கத்தைத்திங்கட்கிழமை ஒத்திவைத்தது.

இந்தப் பூர்வாங்க விசாரணையில் இன்னும் மனுதாரர்கள் தரப்புப் பதிலுரை மிச்சமாக உள்ளது. அதனை அனைத்து மனுதாரர்கள் சார்பிலும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் திங்களன்று நிகழ்த்துவார்.

அத்தோடு இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பான பூர்வாங்க விசாரணை முடிவடையும்.

நீதியரசர் ஆயம் அது தொடர்பில் தமது முடிவை அதன் பின்னர் அறிவிக்கும்.

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# ரணில் சஜித் அணிகளுக்கு இடையில் நிரந்தரப் பிளவு

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து சென்று சஜித் பிரேமதாஸ தலைமையில் ஐக்கிய மக்கள் சக்தி என்ற கட்டமைப்பில் இயங்கிய 99 உறுப்பினர்களின் ஐ.தே.கட்சி உறுப்புரிமையைப் பறிப்பதற்கான முடிவை அக்கட்சி எடுத்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்குக் கட்சியின் மத்திய செயற்குழு பூரண அங்கீகாரம் வழங்கியிருப்பதாகச் செய்திகள் வந்துள்ளன.

ஐ.தே.கட்சியிலிருந்து பிரிந்து தனி அணியாக – ஐ.தே.கட்சிக்கு எதிராக – பொதுத் தேர்தலில் வேட்பாளர் பட்டியலை ஐக்கிய மக்கள் சக்தி நிறுத்தியபோதே இந்தப் பிளவு – முரண்பாடு – பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

ஏற்கனவே இரு தரப்புகளும் சுட்டமண் ஆகிவிட்டன. இனி ஒட்டுவது சாத்தியமற்றது என்றே கருதப்பட்டது.

அதை உறுதிப்படுத்துமாற்போல இப்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தீர்மானம் அமைந்திருக்கின்றது. அவ்வளவுதான்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை வெட்டி, ஒதுக்கி விட்டுக் கட்சியின் வேட்பாளராக சஜித் பிரேமதாஸ மேலெழுந்தபோதே இந்தப் பிளவு – உடைவு – தவிர்க்க முடியாதது என்பது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

அதுவும், கடந்த ஆண்டிலும் கட்சியின் தலைவராக மீளத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்கவை, அவர் விரும்பி அந்தப் பதவியில் இருந்து விலகாத வரையில் அடுத்த நான்கு, ஐந்து ஆண்டுகளுக்கு – அதாவது 2024 வரை – கட்சியின் தலைவர் பதவியில் இருந்து இலகுவில் அகற்றவே முடியாது என்ற காப்புரிமையை கட்சியின் யாப்பு அவருக்கு வழங்கியிருக்கின்றமையால் அவரது பிடியிலிருந்து கட்சியை விடுவித்துக் கொள்வது சஜித் அணிக்குச் சாத்தியமற்றது என்பதே பலரின் கருத்தாக இருந்து வருகிறது.

எனினும், ஏதோ ஒரு கட்டத்தில் நாட்டின் அரசியல் கள நிலைவரம் இந்த இரண்டு தரப்புகளின் மீள் ஐக்கியத்துக்கு – இணக்கத்துக்கு – கட்டாயப்படுத்தும், அப்போது இரு தரப்புகளும் ஒன்றிணைந்து செயற்படுவது தவிர்க்க முடியாத விடயமாக இரு தரப்புகளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு முன்னெடுக்கப்படும் என்றே பலரும் நம்பியிருந்தனர்.

தம்மை விட்டுப் பிரிந்து போய், வேறு அணி அமைத்து, சஜித் தரப்பு தனியாக – தமக்கு எதிராக – தேர்தலில் களமிறங்கிய போதும், இதுவரை அத்தரப்புக்கு எதிராக நடவடிக்கை ஏதும் எடுக்காமல் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அமைதி காத்தமைக்கு இந்த மீள் இணைக்க சாத்தியம் பற்றிய சிந்தனை காரணமாக இருந்திருக்கலாம் என்றே நம்பப்படுகின்றது.

ஆனால், கட்சியை விட்டு விலகிப் போய் தனிப் பெயரில், பிற பங்காளிக் கட்சிகளையும் சேர்த்துத் தனிக் கூட்டு அமைத்த சஜித் அணியினர், தேர்தல் முடிந்ததும் மீண்டும் வருவோம், ஐ.தே. கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவை கைப்பற்றுவோம் என்று பிரகடனப்படுத்தியமை ரணில் தரப்பை சீற்றத்துக்குள் ஆழ்த்தியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

ஐ.தே. கட்சியை விட்டு வெளியேறித் தனிக் கட்சி அமைத்து, தனித்துப் போட்டியிடுவோரை இனிமேலும் ஐ.தே.கட்சியில் உரிமை கோரும் விதத்தில் வைத்திருப்பது அல்லது அதற்கு இடமளித்துப் பார்த்திருப்பது தனக்கும், தனது தலைமையிலான கட்சிக்கும் விபரீதச் சிக்கல்களை எதிர்காலத்தில் தரும் என்று ரணில் தரப்பு அஞ்சியிருக்கக் கூடும் எனக் கருதப்படுகின்றது.

*“தேர்தல் ஐ.தே.கட்சி படுதோல்வி அடையும். அதையடுத்து கட்சியையும் தலைமையகத்தையும் நாம் கைப்பற்றுவோம்”* என்று பிரேமதாஸ அணி பகிரங்கமாக அறிவித்ததும், அந்தத் தரப்பினரை ஐ.தே.கட்சியிலிருந்து முற்றாக வெட்டிவிடும் தீர்மானத்தை ரணில் தரப்பு எடுத்தமைக்கு இந்த விவகாரம்தான் பிரதான காரணம் என்று கூறப்படுகின்றது.

நாடாளுமன்றக் கலைப்பு உத்தரவுக்கு எதிராக உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனுக்களை விசாரணைக்கு ஏற்றுக்கொள்வதா என்பது பற்றிய விசாரணை மீண்டும் திங்கட்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

அந்த வழக்கில் திரும்பவும் வேட்பு மனுத்தாக்கல் செய்யப்பட வேண்டும் என்று ஓர் உத்தரவு வந்தாலும் கூட, அதன் பின்னரும் ஐ.தே.கட்சி – ஐக்கிய மக்கள் சக்தி தரப்புகள் ஒன்றிணைந்து களத்தில் இறங்குவதற்கான வாய்ப்புக்கள் அருகிவிட்டன.

இரண்டு தரப்புகளுக்கும் இடையிலான பிளவும், பிரிவும் நிரந்தரம் என்பது போலவே தென்படுகின்றது.

# மட்டு. கிரான் வாகனேரியில் மண் கொள்ளையர்கள் ஊருக்குள் நுழைந்து கொலைவெறித் தாக்குதல்!

மட்டக்களப்பு கிரான் பிரதேசசெயலாளர் பிரிவில் வாகனேரி கிராமத்தில் பொது மக்களின் மீது மணல் கொள்ளையர்கள் கொடூர தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கிராமத்திற்குள் நுழையும் பிரதான வீதியை முற்றுகையிட்ட ரௌடிகள், கிராமத்திற்கு சென்ற பொதுமக்கள் மீதும் கொடூர தாக்குதல் நடத்தினர்.

அயல் கிராமங்களை சேர்ந்த முஸ்லிம் கும்பலொன்றே இந்த கொடூர தாக்குதலை நடத்தினர்.

மணல் கடத்தல்காரர்களை வழிமறித்து மணலை கொட்டிவிட்டு, உழவு இயந்திரத்தை பொதுமக்கள் அனுப்பியதை தொடர்ந்து, பொது மக்கள் மீது கொடூரத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

வாகனேரி பிரதேசத்தில் கடந்த 10 வருடங்களிற்கு மேலாக சட்டவிரோத மண் அகழ்வு கொடிகட்டிபறக்கிறது. அரசியல், பணபலத்துடன் சில முஸ்லிம் வர்த்தகர்கள் மண் அகழ்வை நடத்தி வருகிறார்கள். அங்கிருந்து அகழப்படும் மண் கொழும்பு உள்ளிட்ட பகுதிகளிற்கு கொண்டு செல்லப்படுகிறது. சட்டவிரோத மண் அகழ்வை தடுக்க முடியாமல் அந்த பகுதி மக்கள் பெரும்சிரமத்தை சந்தித்து வந்தனர்.

மண் அகழ்விற்கான அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்களும், குறிப்பிட்ட அளவிற்கு அதிகமாக மணல் அகழ்வில் ஈடுபட்டு வருகிறார்கள். காலை 4 மணிக்கு மண் அகழ்வு தொடங்கினால், இரவு 8 மணிக்கு பின்னரும் வகைதொகையில்லாமல் உழவு இயந்திரங்கள் மண் அகழ்வில் ஈடுபட்டு வருவது வழக்கம். இதனால் வாகனேரியில் வெள்ள அனர்த்தம் ஏற்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இரவில் சட்டவிரோத மண் கடத்தல்காரர்கள் வயல் நிலங்களிலும் மணல் ஏற்றிச் சென்றுவிடுவார்கள். மண் அகழ்வை தடுக்க முடியாமல் திண்டாடிய மக்கள் அண்மைய நாளிகளில் கிராமமாக ஒன்று திரண்டு, தடுப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வந்தனர். கிராம அபிவிருத்தி சங்கம், பொதுமக்கள், இளைஞர்கள் ஒன்று திரண்டு, பிரதேச செயலாளர், பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினரிடம் தொடர்ந்து முறையிட்டு வந்தனர். எனினும், மண் கடத்தல் நிற்கவில்லை.

இந்த நிலையில் நேற்றுக் காலை கிராம மக்கள் ஒன்று சேர்ந்து, பிரதேச செயலாளரிடம் இது குறித்து முறையிட்டனர். மண் கடத்தல்காரர்கள் வரும் நேரம் குறித்த தகவலும் வழங்கினர். பிரதேச செயலாளர் இது குறித்து பொலிஸார், அதிரடிப்படையினருக்கு அறிவித்திருந்தார்.

எனினும், நேற்று மாலை வரை பொலிஸாரோ, அதிரடிப்படையினரோ அங்கு செல்லவில்லை.

இதையடுத்து மாலையில் ஒன்று திரண்ட மக்கள், சட்டவிரோதமாக மணல் ஏற்றி வந்த இரண்டு உழவுப்இயந்திரங்களை வழிமறித்து, மணலை நிலத்தில் கொட்ட வைத்து, வெற்று உழவு இயந்திரங்களை அனுப்பிவைத்தனர்.

இதையடுத்து, அவர்கள் தமது சங்கத்திற்கு அறிவித்துள்ளனர். (சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடும் அந்த குழுவினரிடம் சங்கம் அமைக்கப்பட்டுள்ளது. சட்ட விரோத மண் அகழ்வில் உழவு இயந்திரம் சிக்கினால், தண்டப்பணத்தை அந்த சங்கமே வழங்குகிறது. சட்டவிரோத மண் அகழ்வில் ஈடுபடுபவர்கள் சிக்கினால் ரௌடிகளை மீட்கும் கூலிப்படையையும் அந்தச் சங்கமே அனுப்பி வைக்குமாம். இதனையடுத்து கொட்டன்கள் மற்றும் ஆயுதங்களுடன் வந்த ரௌடிகள் பொது மக்கள் மீது கொலைவெறித் தாக்குதல் நடத்தினர் என்று கூறப்பட்டது. இதில் பலர் காயமடைந்தனர்.

பின்னர் அந்த ரௌடிக்குழு காவத்தை முனை வீதிப்பகுதிக்கு சென்று, பல் வேறு தேவைகளின் நிமித்தம் வெளியிடங்களிற்கு சென்றுவிட்டு, கிராமத்திற்கு வந்த பொதுமக்கள் மீது கொலைவெறி தாக்குதல் நடத்தியது. பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள் என்ற வித்தியாசமின்றி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இது குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை தொர்ந்து, அங்கு பொலிஸார் வர ரௌடிகள் தப்பியோடி விட்டனர்.

கிராமத்திற்குள்ளும், வீதியிலுமாக நடத்தப்பட்ட தாக்குதலில் 6 பேர் காயமடைந்தனர். அவர்கள் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டனர். தற்போது தலையில் காயமடைந்த பெண்ணொருவர் வாழைச்சேனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார். இருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

## சாயி பரமாத்மாவுடன் ஒருமித்து சங்கமித்த

# சீரடி சாயி பக்தர் ஆறுமுகன் தொண்டமான் சீரடி மத்திய நிலையத்தின் தலைவர் அஞ்சலி



அமரர் ஆறுமுகன் தொண்டமானின் மறைவை ஒட்டி ஸ்ரீலங்கா சீரடி சாயி மத்திய நிலையத்தின் தலைவர் எஸ். என். உதயநாயகம் விடுத்துள்ள அஞ்சலிக் குறிப்பு வருமாறு:-

அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்கள் அரசியல்வாதியாகவும், பழமைவாய்ந்த கட்சிக்கும், தொழில் சங்கத்துக்கும் தலைவனாகவும் இருந்தாலும் அவரது ஆன்மீகத் தொண்டு பலரும் அறிந்திராதது. அவர் வாழ்ந்த காலத்தில், மலையகத்தக்கு மட்டுமல்ல, இலங்கையில் பல பாகங்களிலுள்ள ஆலய வளர்ச்சிக்கும், ஆன்மீகத் தொண்டுக்கும் செய்த உதவிகள் பல!

இவர் ஒரு சீரடி சாயி பக்தர். பல வருடங்களுக்கு முன் வட இந்தியாவிலுள்ள, மகராஸ்ரா மாநிலத்திலுள்ள, சீரடி சமஸ்தானத்தக்குச் சென்று, சீரடி சாயி பாபாவை தரிசித். சமயம் அவருக்கு ஏற்பட்ட ஒரு பெரிய திருப்பத்தின் காரணமாக, சீரடி சாயிபாபாவின் பக்தராகத் தன்னை மாற்றிக்கொண்டார். அதுமட்டுமல்ல சீரடி சந்நிதானத்தினால் அவரிடம் ஒரு பெரிய பொக்கிம் கையளிக்கப்பட்டது. அதாவது சீரடி சாயி பாபா பயன்படுத்திய போர்வையோன்று பெட்டியில் வைத்துக கொடுக்கப்பட்டது. அதனை அவர் தன் பூஜையறையில் வைத்து வழிபட்டுவந்தார். 2016 ஆம் ஆண்டு அந்தப் பொக்கித்தை, அமரர் ஈஸ்வரன் தெய்வநாயகம் அவர்களின் மூலமாக சாயி பக்தர்களின் தரிசனத்துக்கு, கொழும்பு புதுச்செட்டித்தெருவிலுள்ள சாயிநிலயத்துக்கு அனுப்பிவைத்திருந்தார்.

சென்ற ஆண்டு, சீரடி சமஸ்தானத்தின் அழைப்பை ஏற்று, சீரடிக்கு சென்ற சமயம், சீரடி சமஸ்தானத்து அறங்காவளர் திரு. பிபின்தாதா சங்கரராவ் கோலே அவர்களினால் பெற்றுக்கொள்ளப்பட்ட, சீரடி சாயி சமஸ்தானத்திலுள்ள புனித வேப்பமரத்தின் கன்றினை, சீரடி சாயி பக்தரான அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் கைகளினால் பிரதீட்சை செய்யும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது. அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களும் இதனைப் பெரும் பாக்கியமாக ஏற்றுக்கொண்டு, கொழும்பு புதுச்செட்டித் தெருவிலுள்ள சீரடி சாயி மந்தீரில், 2019 டிசெம்பர் 11 ஆம் திகதி பிரதீட்சை செய்துவைத்து, தனது கரங்களினால் பாபாவுக்கு ஆராத்தியும் ஏற்றி வைத்தார்.

'எவன் என்னுடைய திருவடிகளை அடைகின்றானோ, அவனுடைய அத்தனை எண்ணங்களையும் ஈடேற்றுவேன்' என்ற சீரடி சாயி பாபாவின் உறுதிமொழிக்கு ஏற்ப, சீரடி சாயி பக்தரான அமரர் ஆறுமுகன் தொண்டமான் அவர்களின் ஆத்மா, சாயி பரமாத்மாவுடன் ஒருமித்து சங்கமிக்க பிராத்திக்கின்றோம்.
- என்று உள்ளது.

# 2 ஆண்டுகளுக்கு முன் காணாமற்போன தந்தையை கண்டுபிடித்துத் தந்த டிக்டாக்

இந்தியாவின் தெலங்கானா மாநிலத்தில் உள்ள ஒரு குடும்பம் டிக் டாக் செயலிக்கும் அதில் ஒரு குறிப்பிட்ட காணொலியைப் பதிவு செய்தவருக்கும் நன்றி கடன் பட்டுள்ளதாக கூறுகின்றது.

இரண்டு வருடங்களாக காணாமல் போன தங்கள் தந்தையை கண்டுபிடிக்க ஒரு டிக் டாக் காணொலி உதவியுள்ளதாக இவர்கள் கூறுகின்றனர்.

தற்போது கொரோனா வைரஸ் காரணமாக அறிவிக்கப்பட்ட ஊரடங்கால் ஆதரவற்றோருக்கு பலர் உணவளித்து உதவி வருகின்றனர்.

அதே போல பஞ்சாபில் உள்ள காவல்துறை அதிகாரியான அஜெய்ப் சிங், லூதியானா நகரில் ஆதரவின்றி சாலையில் வசிக்கிறவர்களுக்கு உணவு அளித்து உதவியுள்ளார்.

அஜெய்ப் சிங் உணவு அளிப்பதை, குர்பிரீத் சிங் என்பவர் காணொலியாக பதிவு செய்து அதை டிக் டாக்கில் பதிவிட்டுள்ளார். ஆதரவற்றோருக்கு உணவு அளித்து உதவுவதை காணொலியாக பதிவு செய்து சமூக வலைதளத்தில் பதிவிடுவதன் மூலம் ஆதரவற்றோருக்கு உணவு அளித்து உதவ வேண்டும் என்ற எண்ணமும் ஊக்கமும் பலருக்கு ஏற்படும் என காவலர் அஜெய்ப் சிங் நம்புகிறார்.

ஆனால் அந்த காணொலியால் இரண்டு ஆண்டுகள் தந்தையை பிரிந்து வாழும் ஒருவருக்கு மீண்டும் தன் தந்தையுடன் சேர வாய்ப்பு கிடைக்கும் என அஜெய்ப் சிங் எதிர்பார்க்கவில்லை. பஞ்சாபில் உள்ள தந்தையை தெலங்கானாவில் உள்ள மகன் கண்டுபிடிக்க டிக் டாக் செயலி உதவியுள்ளது.



தெலங்கானாவின் பத்ராத்ரி கொத்தகூடம் மாவட்டத்தில் உள்ள பினபாகா எனும் கிராமத்தைச் சேர்ந்த நாகேந்திர பாபு என்பவர் இந்த காணொலியை முதலில் பார்த்துள்ளார்.

காணொலியில் உணவு வாங்கி உண்பவர் தன் நண்பனின் தந்தையை போல் உள்ளதே என்ற சந்தேகத்தில் அந்த காணொலியை தன் நண்பர் ரொட்டா பெத்திராஜுவிடம் பகிர்ந்துள்ளார். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போனவர் ரொட்டா வெங்கடேஷ்வரலு.

வெங்கடேஷ்வரலுவின் குடும்பத்தினர் காணொலியை பார்த்துவிட்டு ஆனந்தத்தில் கண்கலங்கியுள்ளனர்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு காணாமல் போன வெங்கடேஷ்வரலு ஒரு கூலி தொழிலாளி. அவர் தன் மனைவி மற்றும் 5 குழந்தைகளுடன் தெலங்கானாவில் வசித்து வந்துள்ளார். ஒரு நாள் பணியை முடித்துவிட்டு, அருகில் இருந்த லாரி ஒன்றில் தூங்கியுள்ளார். அந்த லாரி வெங்கடேஷ்வரலு இருப்பது தெரியாமல் வேறு மாநிலத்திற்கே சென்றுள்ளது.

பிறகு வெங்கடேஷ்வரலு பாதியில் இறக்கி விடப்பட்டுள்ளார். ஆனால் அவரால் சைகை மொழியில் மட்டுமே பேச முடியும் என்பதால், அவரின் சொந்த ஊர் குறித்து வெங்கடேஷ்வரலு கூறியது யாருக்கும் புரியவில்லை.

மற்றொரு வாகனத்தை பிடித்து அந்த வாகனம் அவரை தெலங்கானா சென்றடைய உதவும் என நினைத்து பயணம் செய்துள்ளார். ஆனால் அந்த வாகனம் அவரை பஞ்சாபின் லூதியானாவில் இறக்கிவிட்டு சென்றுள்ளது. இரண்டு ஆண்டுகள் கழிந்துவிட்டன.

வெங்கடேஷ்வரலுவின் மகன் காணாமல் போன தந்தை தொடர்பாக தெலங்கானா காவல் துறையிடம் புகார் அளித்துள்ளார். ஆனால் காவல் துறையினரின் முயற்சி பலனளிக்கவில்லை.

ஊரடங்கு நடைமுறையில் இருந்தபோதும் பெத்திராஜு தன் அலுவக நண்பர்கள் மற்றும் பஞ்சாபின் காவல் துறையினர் உதவியால் முதலில் தன் தந்தையுடன் காணொலி மூலம் உரையாடியுள்ளார்.

தன் தந்தை சைகையிலேயே தன்னை வந்து அழைத்து செல்லும்படி கூறியதால், உடனே காவல் துறையினரிடம் அனுமதி பெற்று பஞ்சாப் சென்றுள்ளார். தன் தந்தை வெங்கடேஷ்வரலுவை கார் மூலம் பஞ்சாபில் இருந்து கடந்த வாரம் தெலங்கானா அழைத்து வந்து விட்டார். இப்போது எல்லாம் சுபம்.

## இந்தியாவில் தினமும் 5 லட்சம் பரிசோதனைகள் நடத்த முயற்சி

### ஜூலை மாதம் முதல் நடவடிக்கைகள்




இந்தியாவில் வருகிற ஜூலை மாதத்துக்குள் தினமும் 5 லட்சம் கொரோனா பரிசோதனை செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி ஆயோக் உறுப்பினர் மருத்துவர் வி.கே.போல் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தற்போது கொரோனா பரிசோதனை மிகக்குறைந்த நபர்களுக்கே நடத்தப்பட்டு வருகிறது. கடந்த சில தினங்களாக சராசரியாக 1 லட்சத்து 10 ஆயிரம் பேருக்கு மட்டுமே சோதனை நடத்தப்படுகிறது.

600க்கும் மேற்பட்ட பரிசோதனைக் கூடங்கள் மூலம் இந்தப் பணி நடைபெற்று வருகிறது. இதற்கிடையே பரிசோதனை செய்யப்படும் நபர்களின் எண்ணிக்கையை கணிசமான அளவுக்கு உயர்த்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.

தற்போது உள்ளதைவிட ஜூலை மாதத்துக்குள் தினசரி கொரோனா பரிசோதனையை 5 மடங்காக உயர்த்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. தினமும் 5 லட்சம் சாம்பிள்களை பரிசோதனைகள் செய்யும் வகையில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நிதி ஆயோக் உறுப்பினர் மருத்துவர் வி.கே.போல் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவில் 17 மாநிலங்களை வெட்டுக் கிளிகள் தாக்கும் ஆபத்து

இந்தியாவில் 17 மாநிலங்களில் வெட்டுக்கிளிகளால் மோசமான பாதிப்பு ஏற்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. வெட்டுக்கிளிகள் பரவுதல் ஜூலை மாதம் வரை நீடிக்கும் என்று ஐ.நா. உணவு பாதுகாப்பு அமைப்பு கூறி உள்ளது.

ஆப்பிரிக்காவில் இருந்து அரபு நாடுகள், பாகிஸ்தான் வழியாக வடமாநிலங்களுக்குள் புகுந்துள்ள பாலைவன வெட்டுக்கிளிகள் தற்போது ராஜஸ்தான், குஜராத், மத்திய பிரதேசம், உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா ஆகியவற்றுக்குள் புகுந்துள்ளன.

அடுத்த கட்டமாக கிழக்கு நோக்கி பயணித்து வரும் வெட்டுக்கிளிகள் பீகார், ஒடிசா, மேற்கு வங்காளம் மாநிலங்களைநோக்கிபறந்துகொண்டு இருக்கின்றன. ஒருநாளைக்கு 150 கி.மீறற் வரை பயணம் செய்கிறது. அடுத்ததாக தென் மாநிலங்களில் கர்நாடகா வரை பரவும் என்று கணித்துள்ளனர்.

தற்போது பீகாரிலும் ஒரு சில வெட்டுக்கிளிகள் காணப்படுகின்றன. பக்கத்து நாடுகளான நேபாளம், பங்களாதேஷ்வரை அவை பரவ வாய்ப்பு உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது.

மொத்தமாக இந்தியாவில் மட்டும் 17 மாநிலங்களில் பரவும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஆனால், தற்போது வந்துள்ள வெட்டுக்கிளிகள் கூட்டத்துக்குபின்னால்இன்னொரு கூட்டம் வந்துகொண்டு இருக்கிறது. அது, அடுத்த மாதம் மத்தியில் இந்தியாவுக்குள் நுழையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வெட்டுக்கிளிகள் பரவுதல் ஜூலை மாதம் வரை நீடிக்கும் என்று ஐ.நா. உணவு பாதுகாப்பு அமைப்பு கூறி உள்ளது. இதற்கான தடுப்பு நடவடிக்கைகளை மத்திய அரசும், மாநில அரசுகளும் எடுத்து வருகின்றன.



## இந்த நிதியாண்டில் இந்தியாவின் பொருளாதாரம் 5% வீழ்ச்சியுறும்!

நடப்பு நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 5 சதவிகிதம் வீழ்ச்சி அடையும் என்று நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது. எஸ் மற்றும் பி குளோபல் நிறுவனம் இதை மதிப்பீடு செய்துள்ளது.

கொரோனா வைரஸ் இந்தியாவில் மிகவும் வேகமாக பரவி கடும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. இதனைக் கட்டுப்படுத்துவதற்கான ஊரடங்கு காரணமாக தொழில்கள், நிறுவனங்கள் முற்றிலும் முடக்கப்பட்டுள்ளன. இதனால், வேலையின்மை பெருகியுள்ளது.

இதன் காரணமாக இந்தியப் பொருளாதாரத்தில் மந்தநிலை ஏற்பட்டுள்ளது. பொருளாதாரம் பின்னடைவை நோக்கி சென்று கொண்டிருப்பதாக நிபுணர்கள் கூறி வருகின்றனர்.

இதனைத் தெளிவுபடுத்தும் விதமாக இந்திய பொருளாதாரம் நடப்பு நிதியாண்டில் 40 சதவிகிதம் வீழ்ச்சியைக் காணும் என்று எஸ்.பி.ஐ. ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது. மேலும் இந்த ஆய்வறிக்கை 2021ஆம் நிதியாண்டில் 6.8 சதவிகிதம் சுருங்கலாம் என்று தெரிவித்தது.

இந்த நிலையில் நடப்பு நிதியாண்டில் அதாவது மார்ச் 31ஆம் திகதி வரை இந்தியப் பொருளாதாரம் 5 சதவிகிதம் வீழ்ச்சி அடையும் என்று நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது. எஸ் மற்றும் பி குளோபல் நிறுவனம் இதை மதிப்பீடு செய்துள்ளது.

1951ஆம் நிதியாண்டில் இருந்து இந்தியா 5 முறை பொருளாதார வீழ்ச்சியை சந்தித்துள்ளது. 1957 - 1958ஆம் நிதியாண்டில் 0.4 சதவிகிதமும் 1965 - 1966 வரை 2.6 சதவிகிதமும் 1966 - 1967இல் 0.1 சதவிகிதமும் 1972 - 1973இல் 0.6 சதவிகிதமும் 1977 - 1980இல் 5.2 சதவிகிதமும் வீழ்ச்சி அடைந்துள்ளது.

தற்போது 2020 - 21 நிதியாண்டில் இந்திய பொருளாதாரம் 5 சதவிகிதம் வீழ்ச்சியடையும் என்று அந்த குழு தனது ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளது.

வளர்ச்சிக்கு பெரிய பாதிப்பு, நிரந்தர பொருளாதார இழப்பு மற்றும் பொருளாதார முழுவதும் இருப்பு நிலையில் சரிவு ஆகிய காரணங்களால், பொருளாதார வீழ்ச்சி ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 10 சதவிகிதம் என்ற இலக்கை மத்திய அரசு நிர்ணயித்துள்ளது. இதில் 1.2 சதவிகிதம் நேரடி தூண்டுதல் நடவடிக்கையை கொண்டுள்ளது. மீதியுள்ள 8.8 சதவிகிதம் பணப்புழக்க ஆதரவு நடவடிக்கைகள் மற்றும் கடன் உத்தரவாதங்கள் ஆகியவை வளர்ச்சியை நேரடியாக ஆதரிக்காது.

அதே நேரத்தில் அடுத்த 3 ஆண்டுகளில் இந்திய பொருளாதாரம் வளர்ச்சியடையும் என்று அந்த நிபுணர்கள் குழு தெரிவித்துள்ளது. 6.5 சதவிகிதத்திலிருந்து 8.5 சதவிகிதமாக வளர்ச்சி விகிதம் இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கொரோனா தடுப்பூசியை கண்டறிய 30 குழுக்கள்

இந்தியாவில் கொரோனா தடுப்பூசி கண்டறியும் பணியில் 30 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன என்று முதன்மை அறிவியல் ஆலோசகர் கே. விஜயராகவன் தெரிவித்தார்.

இந்தியாவில் கொரோனா தடுப்பூசி கண்டறியும் பணியில் அகில இந்திய தொழில்நுட்ப கல்வி கவுன்சில் உள்பட 30 குழுக்கள் ஈடுபட்டுள்ளன. இவற்றில் பெரிய தொழில் நிறுவனங்கள் முதல் தனிப்பட்ட நிபுணர்கள் வரை அடக்கம். 20 குழுக்கள் முழு வேகத்தில் உள்ளன.

பொதுவாக தடுப்பூசி கண்டுபிடிக்க 10 ஆண்டுகள் ஆகும். ஆனால், இந்த தடுப்பூசியை ஓராண்டுக்குள் உருவாக்குவதுதான் உலக நாடுகளின் நோக்கம். தடுப்பூசி கண்டறிவது, மிகவும் சவாலான வேலை. பல முயற்சிகள் தோல்வி அடையலாம். எனவே, பெரிதும் முயற்சிக்க வேண்டும்.

இவ்வாறு விஜயராகவன் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஹொங்கொங்கின் தன்னாட்சி உரிமை பறிப்பு பாதுகாப்பு கவுன்சிலைக் கூட்ட வலியுறுப்பு

ஹொங்கொங்கின் தன்னாட்சி அதிகாரத்தை கட்டுப்படுத்தும் வகையில் கொண்டுவரப்பட்டுள்ள தேசிய பாதுகாப்பு மசோதாவிற்கு சீன நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. இதற்கு ஹொங்கொங் மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள நிலையில், ஐ.நா. பாதுகாப்பு கவுன்சிலை கூட்டி விவாதிக்க அமெரிக்கா வலியுறுத்தியுள்ளது.

70 லட்சம் மக்கள் தொகையை கொண்ட ஹொங்கொங் பல ஆண்டுகளாக இங்கிலாந்தின் காலனி ஆதிக்கத்தின் கீழ் இருந்து வந்தது. 1997 ஆம் ஆண்டு இங்கிலாந்து ஒப்படைத்த பின்னர், ஹொங்கொங் சீனாவின் கட்டுப்பாட்டில் தன்னாட்சி பிரதேசமாக இருந்து வருகிறது. வெளியுறவு, இராணுவம் ஆகியவற்றைத் தவிர அனைத்துத் துறைகளையும் ஹொங்காங் அரசே நிர்வகித்து வருகிறது.

ஹொங்கொங்கில் கிரிமினல் வழக்குகளில் சிக்கும் கைதிகளை சீனாவுக்கு நாடு கடத்தி விசாரிக்க வகை செய்யும் சட்ட திருத்த மசோதாவை எதிர்த்து, கடந்த ஆண்டு போராட்டம் வெடித்தது. நீண்ட நாள்களாக போராட்டம் நீடித்ததால், அந்த சட்டத்திருத்த மசோதாவை



கைவிட்டது.

இந்த நிலையில், கொரோனா பாதிப்பில் இருந்து மீண்டு வந்த சீனா, ஹொங்கொங் மீதான தனது ஆதிக்கத்தை செலுத்தும் விதமாக புதிய தேசிய பாதுகாப்பு சட்டத்தை அமல்படுத்தும் முயற்சியில் இறங்கியது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்த சீன நாடாளுமன்ற கூட்டம் தொடங்கியதும், தேசிய பாதுகாப்பு சட்ட மசோதா தாக்கல் செய்யப்பட்டது. ஹொங்கொங்கிற்கான புதிய பாதுகாப்புச் சட்டத்திற்கு நாடாளுமன்றம் ஒப்புதல் அளித்துள்ளது. பிரிவினைவாதம், பயங்கரவாதம் மற்றும் வெளிநாடுகளின் தலையீட்டை தடுப்பதே சட்டத்தின் நோக்கம் என விளக்கம் அளிக்கப்பட்டது. ஜனவரி முதலாம் திகதிமுதல் புதிய சட்டம் அமலுக்கு வரும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சீன நாடாளுமன்றத்தில் மசோதா நிறைவேற்றப்பட்டதற்கு கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, கனடா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள், இது 1984ஆம் ஆண்டு சீனா - பிரிட்டன் ஒப்பந்தத்திற்கு எதிரான நடவடிக்கை என விமர்சித்துள்ளன.

ஹொங்கொங் மக்களின் உரிமைகளை பறிக்கும் செயல் என்று அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ கண்டனம் தெரிவித்துள்ளார். தேசிய பாதுகாப்பு மசோதா நிறைவேற்றப்பட்டதைக் கண்டித்து ஹொங்கொங் மக்கள் முழக்கங்களை எழுப்பி வருகின்றனர். பொலிஸார் வன்முறையில் ஈடுபடுகின்றனர் எனவும், ஜனநாயக ரீதியாக சீர்திருத்தங்களை அமுல்படுத்த வேண்டும் எனவும் அவர்கள் வலியுறுத்தினர்.


# விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்து ரூ.3 கோடி மதிப்புள்ள பணம் கண்டுபிடிப்பு



பாகிஸ்தானில் விபத்துக்குள்ளான விமானத்தில் இருந்து (இந்தியப் பணத்தில்) 3 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு நாட்டு கரன்ஸிகளில் பணம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கடந்த 22 ஆம் தேதி லாகூரில் இருந்து சென்ற விமானம் கராச்சியில் தரையிறங்குவதற்கு முன்பு குடியிருப்பு பகுதியில் விபத்துக்குள்ளானது. இதில் குழந்தைகள் உள்பட 97 பேர் மரணமடைந்தனர் என அந்நாட்டு அரசு தெரிவித்துள்ள நிலையில், 2 பேர் மட்டும் உயிர் பிழைத்தனர்.

விமானத்தின் இடிபாடுகளில் இருந்து உடைமைகளை எடுத்து உரியவர்களிடம் ஒப்படைக்கும் பணி நடந்து வரும் நிலையில், 2 பைகளில் இந்திய மதிப்பில் 3 கோடி ரூபாய் மதிப்புள்ள பல்வேறு நாடுகளின் கரன்ஸி நோட்டுகள் காணப்பட்டுள்ளனஎனத் தெரிவித்துள்ள அதிகாரிகள், பணம் யாருடையது என்றும் விமானநிலையை பரிசோதனைகளை மீறி இவ்வளவு பெரிய தொகை எப்படி விமானத்தில் எடுத்து வரப்பட்டது என்றும் விசாரணை நடந்து வருவதாகக் குறிப்பிட்டனர்.



# உலகம் முழுவதும் தொற்று 59 லட்சத்தைக் கடந்தது

உலகம் முழுவதும் கொரோனா தொற்று கண்டறியப்பட்டவர்களின் எண்ணிக்கை 59 லட்சத்தை கடந்த நிலையில், 3 லட்சத்து 62 ஆயிரம் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

இன்றைய நிலைவரப்படி உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் தாக்குதலால் பாதிப்பு அடைந்தோர் எண்ணிக்கை 59 லட்சத்து 30 ஆயிரமாக இருந்தது.

கொரோனா தாக்குதலில் மிகவும் பாதிக்கப்பட்ட நாடாக அமெரிக்கா தொடர்கிறது. அங்கு கொரோனா உறுதி செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 17 லட்சத்து 68 ஆயிரத்து 416 ஆனது.

அமெரிக்காவை தொடர்ந்து இரண்டாம் இடத்தை பிடித்துள்ள நாடு பிரேசில். அங்கு இந்த வைரஸ் தொற்றுக்கு ஆளானவர்கள் எண்ணிக்கை 4 லட்சத்து 38 ஆயிரத்து 812 ஆகும். மூன்றாம் இடத்தில் ரஷ்யா இருக்கிறது. அங்கு இந்த வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டவர்கள் எண்ணிக்கை 3 லட்சத்து 87 ஆயிரத்து 623 ஆகும்.

இங்கிலாந்தில் 2 லட்சத்து 69 ஆயிரத்து 127 பேரும், இத்தாலியில் 2 லட்சத்து 31 ஆயிரத்து 732 பேரும் பாதிப்புக்கு ஆளாகி இருக்கிறார்கள்.

உலகமெங்கும் கொரோனா வைரஸ் தாக்கி, சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை நேற்று 3 லட்சத்து 62 ஆயிரத்து 368 ஆனது. இந்த உயிர்ப்பலியிலும் அமெரிக்கா தொடர்ந்து முதல் இடம் வகிக்கிறது. அங்கு 1 லட்சத்து 3 ஆயிரத்து 330 பேர் பலியாகி உள்ளனர்.

அதைத் தொடர்ந்து இங்கிலாந்தில் 37 ஆயிரத்து 837 பேரும், இத்தாலியில் 33 ஆயிரத்து 142 பேரும், பிரான்ஸில் 28 ஆயிரத்து 662 பேரும், பிரேசிலில் 26 ஆயிரத்து 764 பேரும் இதுவரை இறந்துள்ளார்கள்.

# தென்கொரியாவில் மீண்டும் தொற்று பரவும் அபாய நிலை



கொரோனாவை வெற்றிகரமாக கட்டுப்படுத்திய நாடு என கூறப்படும் தென்கொரியாவில் மீண்டும் தொற்று அலை ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதை அடுத்து தலைநகரான சியோலில், பூங்காக்கள், பொழுது போக்கு இடங்கள், திரையரங்குகள் உள்ளிட்ட மக்கள் அதிகம் கூடும் இடங்களை வரும் 14 ஆம் தேதி வரை மூட அரசு உத்தரவிட்டுள்ளது.

ஏப்ரல் 5 ஆம் திகதிக்குப் பிறகு நேற்று முன்தினம் ஒரே நாளில் 79 பேருக்கு தொற்று கண்டுபிடிக்கப்பட்டது. இவர்களில் 54 பேர் சியோலின் புறநகர்ப் பகுதியான புச்சியோனை (Bucheon) சேர்ந்தவர்கள் என தெரிவித்துள்ள தென்கொரியாவின் துணை சுகாதார அமைச்சர் கிம் கேங் லிப், புச்சியோன் தொடர்புடைய 4150 பேர் நோய்த்தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் எனக் கூறியுள்ளார்.

தென்கொரியாவில் இதுவரை 11,344 பேருக்கு தொற்று ஏற்பட்டு அவர்களில் 269பேர் உயிரிழந்தனர்.

# கொரோனா நோய்த் தொற்று இருபது அடி வரையில் பாயுமாம்



கொரோனா வைரஸ் 6 அடி தூரம் வரைதான் பரவும் என்று கூறப்பட்டதை பொய்யாக்கும் விதமாக கொரோனா தொற்று 20 அடி தூரம் வரை பரவும் என்று அமெரிக்காவின் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட புதிய ஆய்வுகள் தெரிவித்துள்ளன.

வரும் குளிர்காலத்தில் இந்தியாவில் அது மும்மடங்கு அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இருமல், சளி, எச்சில் துப்புதல் போன்றவற்றால் கொரோனா வைரஸ் மற்றவர்களுக்குப் பரவுகிறது.

பேசுவதன் மூலமாகவும் தெறிக்கும் துளிகளில் கொரோனா பரவுகிறது. இதன் மூலம் தொற்று உடைய 40 ஆயிரம் துளிகள் வெளியேறுகின்றன. புவி ஈர்ப்பு சக்தியால் பெரும்பாலும் இவை நிலத்தில் உதிர்ந்து விடுகின்றன. எனினும் சில துளிகள் காற்றில் மிதந்தபடி பல மணி நேரம் நீடிக்கின்றன. இவற்றால் ஆறடி வரை தான் பாதிப்பு என கடந்த கால ஆய்வுகள் தெரிவித்த நிலையில் 20 அடி தூரம் வரை நோய் நுண்தொற்று பரவக்கூடும் என்று புதிய ஆய்வுகள் எச்சரித்துள்ளன.

# முடி திருத்தத்தில் சாதனை

ரஷ்யாவில் தொடர்ந்து 2 நாள்களாக தூங்காமலேயே 90க்கும் மேற்பட்டோருக்கு சலூன் கடைகாரர் ஒருவர் முடித்திருத்தம் (சிகை அலங்காரம்) செய்து சாதனை புரிந்துள்ளார்.

கோஸ்ட்ரோமா பகுதியை சேர்ந்த விலாடிஸ்லாவ் டேமிடோவிச் என்பவர் திங்கள்கிழமை அப்பணியை தொடங்கி புதன்கிழமை வரை 48 மணி நேரம் செய்தார். இடை இடையே உணவருந்த நேரம் எடுத்துக் கொண்ட அவர், பணியைத் தொடர்ந்தார்.

# கோட்டா அரசால் நாட்டுக்கு எந்த நன்மையுமே இல்லை!



## குமார வெல்கம குற்றச்சாட்டு

கொழும்பு, மே 29

தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்த பின்னர் நாட்டுக்கு எந்த நன்மையும் நடக்கவில்லை என முன்னாள் அமைச்சரும் ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் களுத்துறை மாவட்ட வேட்பாளருமான குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

தொடங்கொடை பிரதேசத்தில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நாட்டின் பொருளாதாரம் தற்போது மோசமான வீழ்ச்சியடைந்துள்ளதுடன் திறைசேரியின் கஜானா கலியாகியுள்ளது.

கொரோனா தொற்றி மக்கள் சாகமல் செத்து மடியும் மக்களின் வயிற்றில் அடித்துள்ள அரசு, குடிதண்ணீர், தொலைபேசிக் கட்டணம் உட்பட அனைத்தையும் அதிகரித்துள்ளது.

இந்த அரசுக்கு அடுத்த தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் கிடைத்ததால், மக்களிடம் இருந்து வெட்டுவதற்கு எதுவும் இருக்காது – என்றார்.

# 221 இலங்கையர் நாடு திரும்பினர்

கொழும்பு, மே 29

பிரிட்டனில் சிக்கித்தவித்த 221 இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.

ஸ்ரீலங்கன் ஏயார் லைன்ஸ்க்குச் சொந்தமான யு.எல் –1504 சிறப்பு விசேட விமானம் மூலம் இவர்கள் நேற்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12.25 மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இவர்கள் அனைவரும் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டு, தனிமைப்படுத்தல் முகாம்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# 2 ஆவது கொரோனா அலை நாட்டில் ஏற்படும் பேராபத்து

## வைத்தியர்கள் கடும் எச்சரிக்கை

கொழும்பு, மே 29

இலங்கையில் கொரோனா வைரஸ் பரவலின் இரண்டாவது அலை ஏற்படலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான கடற்படையினர் மற்றும் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்களை உரிய முறையில் முகாமைத்துவம் செய்யவில்லை என்றால் கொரோனாவின் இரண்டாவது அலை நாட்டினுள் ஏற்படக் கூடும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் வைத்தியர் நவீன் டி சொய்ஸா தெரிவித்துள்ளார்.

இதுவரை உலக சுகாதார அமைப்பு ஆசியா, அமெரிக்கா உட்பட பல நாடுகளுக்கு இரண்டாவது கொரோனா அலை தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே மேற்குறிப்பிட்ட நோயாளிகளை முகாமைத்துவம் செய்வது அத்தியாவசியம் என அவர் குறிப்பிட்டார்.

இந்த நடவடிக்கைக்காக சமூக இடைவெளியைக் கடைபிடித்தல், சுய தனிமைப்படுத்தல், கிருமிநாசினி தெளித்தல் மற்றும் முகக் கவசம் அணிதல் ஆகிய சுகாதாரப் பாதுகாப்புடன் செயற்படுதல் கட்டாயமாகும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வெளிநாடுகளில் இருந்து இலங்கை வரும் நபர்களுக்காக வைத்தியசாலை மற்றும் தனிமைப்படுத்தல் நிலையங்களின் வசதிகளை அதிகரிக்கவேண்டும் எனவும் அவர் கோரினார்.

# மைத்திரி ஆட்சியில் 4 ஆணைக்குழுக்கள்

## அவற்றுக்கு 400 கோடி ரூபா செலவு

கொழும்பு, மே 29

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஆட்சிக்காலத்தில் 400 கோடி ரூபா செலவிட்டு, விசாரணைகளை நடத்திய நான்கு ஜனாதிபதி ஆணைக்குழுக்களின் விசாரணை அறிக்கைகள் ஜனாதிபதி செயலகத்திற்கு கிடைத்துள்ள போதிலும் இந்த அறிக்கையில் வெளியிடப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைய இதுவரை எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இந்த ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நடத்திச் செல்வதற்காக வாகனங்கள், அவற்றுக்கான எரிபொருள் செலவுகள் உட்பட பல்வேறு பணிகளுக்காக மட்டும் நான்கு கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக அரச கணக்காய்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

சில ஆணைக்குழுக்கள் பல்வேறு அரச நிறுவனங்களின் தலைவர்களிடம் விசாரணை நடத்தி, ஆவணங்களை பெற்று, சாட்சியங்களை விசாரித்து அனைத்து விசாரணைகளையும் நிறைவு செய்து, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் அறிக்கையை வழங்கிய போதிலும் அவற்றில் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகள் மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட விடயங்கள் தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என ஜனாதிபதி செயலகத்தின் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

நல்லாட்சி அரசுக்கு முன்னர் ஆட்சியில் இருந்த ராஜபக்ஷ அரசில் அரச நிறுவனங்கள் மற்றும் அந்த அரசின் அமைச்சர்கள் செய்ததாக கூறப்படும் நிதி மோசடிகள் தொடர்பாக விசாரிக்க 400 கோடி ரூபாவுக்கும் மேல் செலவிடப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அனைத்து ஜனாதிபதி ஆணைக்குழுக்களும் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகளை அழைத்தும் சாட்சியங்களை பெற்றுக் கொண்டன.

அரச நிறுவனங்களில் கடந்த நிதி மோசடிகள் சம்பந்தமான சம்பவங்களை விசாரிக்க ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்தன் மூலம் ஏற்பட்டுள்ள நிதிச் செலவுகளை விசாரிக்க மேலும் ஒரு விசாரணை ஆணைக்குழுவை நியமிக்க நேரிட்டுள்ளதாக இது சம்பந்தமாக கருத்து வெளியிட்டுள்ள அரச கணக்காய்வு திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் கூறினார்.

# தங்கப் புத்தர் சிலைகள் இரத்தினக் கற்கள் மீட்பு!

கொழும்பு, மே 29

பெரும் மதிப்பு மிக்க புத்தர் சிலைகள் மற்றும் இரத்தினக் கற்களை சட்டவிரோதமாக மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் சந்தேக நபர் ஒருவர் ஊழல் தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

34 வயதான நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஊழல் தடுப்புப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் சந்தேக நபரின் வீட்டில் சோதனையிடப்பட்டது.

இதன்போது, இரண்டு தங்கப் புத்தர் சிலைகள் மற்றும் 12 வெவ்வேறு வண்ண இரத்தினக் கற்கள் என்பன மீட்கப்பட்டன என ஊழல் தடுப்பு பிரிவினர் கூறியுள்ளனர்.

இந்தக் கலைப்பொருள்கள் புதையலில் இருந்து மீட்கப்பட்டிருக்கலாம் என்று அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

சந்தேகநபர் ஆனமடுவ நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir

ஜல்லிக்கட்டு




தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளைய (30.05.2020) தலைப்பு ஜல்லிக்கட்டு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# பெருந்தோட்டத் தொழிலாளர் வர்க்கத்தின் குரல் மௌனித்தது மிக வேதனைக்குரியது

## சுரேஷ் க. பிறேமச்சந்திரன் அறிக்கை

**இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான அமரர் ஆறுமுகம் தொண்டமானது குரலும் பெருந்தோட்டத் தொழிலாள வர்க்கத்தின் உரிமைகளை வென்றெடுப்பதற்காகத் தொடர்ந்தும் ஒலித்துக் கொண்டிருந்தது. அன்னாரின் எதிர்பாராத மரணத்தால் அவரது குரல் மௌனிக்கச் செய்யப்பட்டுள்ளது.**



அந்த இடத்தை அடுத்துத் தலைமையேற்பவர்கள் நிரப்ப வேண்டும் என்ற வேண்டுகோளை முன்வைத்து அமரர் ஆறுமுகம் தொண்டமானின் மறைவிற்கு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் இணைப்பேச்சாளருமான சுரேஷ் க.பிறேமச்சந்திரன் தனது அஞ்சலியைச் செலுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:–

மலையக தேயிலை இறப்பர் தோட்டங்களில் வேலை செய்வதற்காக இந்திய தமிழ் மக்கள் பிரிட்டிாரினால் அழைத்துவரப்பட்டு, நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. பிரித்தானியாவும் இலங்கையிலிருந்து வெளியேறிச் சென்றுவிட்டது. 1948ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் அடைந்தபொழுதும், பெருந்தோட்டப் பகுதியில் வாழக்கூடிய மலையகப் பாட்டாளி வர்க்கம் இன்னும் தமது நாளாந்த வேதனங்களுக்காகப் போராடி வருகின்றது.

கல்வி, சுகாதாரம், வேலைவாய்ப்பு, இருப்பிடம், பாதுகாப்பு உட்பட அனைத்துத் துறைகளிலும் இன்னமும் அவர்கள் ஒடுக்கப்பட்ட சமுதாயமாகவே இருந்து வருகின்றார்கள். அது மாத்திரமல்லாமல், சுதந்திரம் அடைந்ததாகக் கூறிக் கொள்ளும் ஒரு நாட்டில் மலையகத் தமிழர்களின் வாக் குரிமை, குடியுரிமை அனைத்தும் பறிக்கப்பட்டு, அவர்கள் நாடற்றவர்களாக ஆக்கப்பட்டதும் இந்த மண்ணில் நடை பெற்றது. அத்தகைய ஒரு சமுதாயத்திற்குத் தலைமை தாங்கி, அவர்களை ஓரணியில் திரட்டி, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் என்ற தொழிற்சங்கத்தையும் ஓர் அரசியல் கட்சியையும் உருவாக்கி, அதனைத் தலை மையேற்றுத் திறம்பட வழி நடத்தியவர் தான் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான். மலையக மக்களின் ஒவ்வொரு உரிமைக்காகவும் அவர் மிக நீண்டகாலமாக தனது மக்களை அணிதிரட்டி நாடாளுமன்றத்திலும் வெளியிலும் போராடி வந்திருக் கின்றார்.

இன்றைக்கு மலையகத் தமிழ் மக்களுக்கு ஒரு குறைந்தபட்ச உரிமைகள், சலுகைகள் கிடைத்திருக்கிறதென்றால் அதற்கு மூல காரணமாக இருந்தவரும் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களே. அவரது மரணத்திற்குப் பின்னர், மலையக மக்களின் தொழிற்சங்கமான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸையும் கட்சியையும் தலைமையேற்றி வழிநடத்திச் சென்றவர் சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்களின் பேரனான அமரர் ஆறுமுகம் தொண்டமான் அவர்களே.

மலையக மக்களின் தேவைகளும் பிரச்சினைகளும் இன்னமும் பல நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. அவற்றைத் தீர்த்து வைப்பதற்கான கடமையும் பொறுப்பும் மலையக மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தொழிற்சங்கங்கள் மற்றும் அரசியல் கட்சிகளைச் சார்ந்தவை. அந்த வகையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு ஒரு பாரிய கடமை தொடர்ந்தும் இருந்துகொண்டே இருந்தது. அதனைப் பொறுப்புடன் வழிநடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பும் கடமையும் இந்த கட்சியை எதிர்காலத்தில் தலைமைதாங்கிச் செயற்படக்கூடிய அனைவருக்கும் உரியது.

அமரர் ஆறுமுகம் தொண்டமான் இளம் வயதிலிருந்தே தமது தாத்தாவான அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானுடன் இணைந்து பணியாற்றியவர். அவரது செயலாளராகக் கடமையாற்றியவர். இதன் காரணமாக மலையக மக்களின் பிரச்சினைகள் அனைத்தையும் நுணுக்கமாக அறிந்துகொண்டவர். தொழிற்சங்கத்தைப் பற்றியும் அரசியலைப் பற்றியும் ஆழமாகப் புரிந்து கொண்டவர். கம்பெனி முதலாளிகளுடன் தமது மக்களுக்காகப் பேரம் பேசுவதிலும் வல்லமை கொண்டவர். இவ்வாறான பல்வேறு திறமைகள் இருந்ததன் காரணமாகத்தான் மலையகத் தமிழ் மக்களின் தலைவராகத் திகழ்ந்தார். அவர் அரசியலில் இன்னமும் நீண்டதூரம் பயணிக்க வேண்டியிருந்தது. ஆனால் காலம் அவரை விரைவிலேயே தன்வசப்படுத்திக்கொண்டதானது மலையக மக்களை பெரும் துன்பக் கடலில் ஆழ்த்தியுள்ளது. அவர் அமைச்சராக இருந்த காலத்தில் இனம், மதம், சாதி என்று பாராமல் அனைவருக்கும் உதவியாக இருந்தார்.

மலையக மக்களுடன் இணைந்து அவரது மரணத்திற்காக நாமும் எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரைப் பிரிந்து வாடும் அவரது மனைவி, பிள்ளைகள், குடும்ப உறுப்பினர்கள், கட்சி மற்றும் தொழிற்சங்க உறவுகள், நண்பர்கள் ஆகிய அனைவரின் துன்பத்தில் நாமும் பங்குகொள்கிறோம். அன்னாரின் ஆன்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம். – என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பஸ் போக்குவரத்தில் வருகிறது புதிய சட்டம்

கொழும்பு, மே 29

பஸ்களில் ஆசன எண்ணிக்கைக்கமைய மாத்திரம் பயணிகளை அழைத்துச் செல்வதனைச் சட்டமாக்குவதற்கு போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர யோசனை ஒன்று சமர்ப்பித்துள்ளார்.

புதிய சட்டத்தை அமுல்படுத்துவதாயின் பஸ் கட்டணத்தை குறிப்பிடத்தக்க அளவு அதிகரிக்கவேண்டும் என அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

ஆசனங்களின் எண்ணிக்கைக்கு அமைய மாத்திரம் பயணிகளை அழைத்து செல்லும் சட்டம் அமுல்படுத்தப்பட்டதால் பஸ்துறை முழுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதாக மாகாண பேருந்து சங்கத்தின் தலைவர் சரத் வீஜிதகுமார தெரிவித்துள்ளார்.

பேருந்திற்காக ஏற்படும் செலவினை ஏற்க முடியாத நிலைமை ஏற்படும் என அவர் குறிப்பிட்டார்.

எனினும் அந்த யோசனையைச் செயற்படுத்துவதற்கு மாற்றுக் கட்டண முறையை அறிமுகப்படுத்தவேண்டும் என இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

# பொதுத் தேர்தலை விரைவாக நடத்த ஆணைக்குழுவுக்கு அக்கறையில்லை

## மஹிந்த அணி குற்றச்சாட்டு



கொழும்பு, மே 29

நாடாளுமன்றத் தேர்தலை விரைவாக நடத்துவதில் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அக்கறை கிடையாது. தேர்தலைப் பிற்போடும் எதிர்த்தரப்பினரது நோக்கத்துக்கு ஆதரவாகவே தேர்தல்கள் ஆணைக்குழு செயற்படுகின்றது என மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக குற்றஞ்சாட்டினார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துரைக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் அரசின் செயற்பாடுகளுக்கு அரச நிறுவனங்கள் தங்களது சேவைக்கு அப்பால் சென்று ஒத்துழைப்பு வழங்கின.

பொதுத்தேர்தலை விரைவாக நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. பொதுத்தேர்தலை ஜூன் 20ஆம் திகதி நடத்த முடியும் எனக் குறிப்பிட்டபோதும் தேர்தல்கள் ஆணையாளர் தேர்தலை நடத்துவதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகளைக்கூட முன்னெடுக்கவில்லை.

பொதுத்தேர்தலை விரைவாக நடத்தும் நோக்கம் தேர்தல்கள் ஆணைக்குவுக்குக் கிடையாது. தேர்தலைப் பிற்போட எதிர்த்தரப்பினர் முன்னெடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவாகவே ஆணைக்குழு செயற்படுகின்றது.

கொரோனா வைரஸ் பரவல் தற்போது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. வைரஸ் சமூகத் தொற்றாக பரவல் அடையவில்லை. ஆகவே, தேர்தல்கள் ஆணைக்குழு சுகாதார தரப்பினரது பரிந்துரைக்கு அமைய செயற்படுவது அவசியமாகும் – என்றார்.

# மழையுடனான வானிலை வலுவடையும்

கொழும்பு, மே 29

இலங்கையைச் சூழவுள்ள கீழ் வளிமண்டலத்தில் ஏற்பட்ட தளம்பல் நிலை காரணமாக நாடு முழுவதும், குறிப்பாக நாட்டின் தென் மேற்கு பகுதியில் தற்போதைய மழையுடனான வானிலை மேலும் வலுடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேல், சப்ரகமுவ,மத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் உள்ளது.

மேல், சப்ரகமுவ மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் 150 மி.மீற்றருக்கும் அதிகமான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப் படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல இடங்களில் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாடு முழுவதும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் உள்ளதாக வளிமண்டலவியல் திணைக்களம் கூறியுள்ளது.

# வாக்காளர் அட்டை அச்சிட தயாராகுமாறு அரச அச்சக திணைக்களத்துக்கு பணிப்பு

கொழும்பு, மே 29

பொதுத்தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணிகளை ஆரம்பிக்க தயாராக இருக்கும்படி அரச அச்சகத் திணைக்களத்திடம் தேர்தல்கள் ஆணைக்குழு பணிப்புரை விடுத்துள்ளதாக கூறப்படுகின்றது.

இந்தநிலையில், உயர்நீதிமன்ற தீர்ப்பு வந்த பின் பணிகளை ஆரம்பிப்பதாக அச்சகத் திணைக்களம் கூறியுள்ளது.

அத்தோடு வாக்காளர் அட்டைகளை அச்சிடும் பணிகளுக்கு 15 தொடக்கம் 20 நாள்கள் வரை செல்லும் என்றும் அந்தத் திணைக்களம் கூறியுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# வவுனியாவில் கிரவல் அகழ்வால் 320 ஏக்கர் நெற்செய்கை பாதிப்பு

வவுனியா, மே 29

வவுனியா – கன்னாட்டி பெரியதம்பனை வீதியில் அமைந்துள்ள கிராமத்திலுள்ள மக்கள், தமது பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிரவல் அகழ்வுப்பணி காரணமாக 320ஏக்கர் நெற் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் தமது வாழ்வாதார ஜீவனோபாயமான விவசாய தொழிலை கைவிடவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் கவலை வெளியிட்டுள்ளனர்.

விவசாயிகள் பட்டினிச்சாவை எதிர்கொண்டுள்ளதாகவும் தமது விவசாய நடவடிக்கை தொடர்ந்து மேற்கொள்வதற்கு கிரவல் அகழ்வுப்பணியை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிய மகஜர், செட்டிகுளம் பிரதேச சபை தவிசாளர் மற்றும் வெங்கலச்செட்டிகுளம் பிரதேச செயலாளர் ஆகியோரிடம் நேற்று வியாழக்கிழமை கையளித்துள்ளதாக கன்னாட்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 1977ஆம் ஆண்டு முதல் குடியிருந்த மக்களின் காணிகளில், முன்னர் வெங்கல செட்டிகுளம் பிரதேச செயலாளராக கமலதாசன் கடமையாற்றிய காலத்தில் இடம்பெற்ற கிரவல் அகழ்வுப்பணிகள் கிராம மக்களின் முயற்சியினால் நிறுத்தப்பட்டிருந்தது. தற்போது மீண்டும் கிரவல் அகழ்வுப்பணிகள் இடம்பெற்று வருகின்றது.

எனினும் அண்மையில் மக்கள் ஒன்றிணைந்து தமது எதிர்ப்புக்களை தெரிவித்துள்ளபோதிலும் கிரவல் அகழ்வுப்பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இந்நடவடிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த பெப்ரவரி 29ஆம் திகதி கிராம அமைப்புக்கள் பொது அமைப்புக்கள் ஒன்றிணைந்து ஆர்ப்பாட்டம் ஒன்றினை மேற்கொண்டதுடன் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளரிடம் வலியுறுத்தி இருந்தனர். மக்களின் எதிர்ப்புக்களை மீறியும் இங்கு கிரவல் அகழ்வுப்பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

இதனால் இந்தக் கிராமத்தைச் சூழவுள்ள ஐந்திற்கும் மேற்பட்ட குளங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இதனை நம்பி விவசாய நெற் செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் தமது நிலங்களில் நெற்செய்கை மேற்கொள்ள முடியவில்லை. இதனால் சுமார் 320ஏக்கர் நெற் செய்கை மேற்கொள்ள முடியாமல் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் எமது மக்களின் வாழ்வாதாரமான விவசாய செய்கையை மேற்கொள்வதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பதுடன் கிரவல் அகழ்வுப்பணியை தடுத்து நிறுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகஜரின் பிரதிகள் வட.மாகாண ஆளுநர், வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர், கனிய வள அமைச்சு, நன்னீர் விவசாய அமைச்சு, கடற் தொழில் நீரியல்வள மற்றும் மூலகங்கள் அமைச்சு, மத்திய சுற்றாடல் அதிகாரசபை, புவிச்சரிதவியல் சுரங்கங்கள் பணியகம் கொழும்பு, வன பரிபாலனத்திணைக்களம், பறயனாளங்குளம் பொலிஸ் நிலையம், கன்னாட்டி கிராம அலுவலகர் ஆகியோருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 5 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

கொழும்பு, மே 29

இரத்தினபுரி உள்ளிட்ட 5 மாவட்டங்களுக்கு விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கை நீடிக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, இரத்தினபுரி, கேகாலை, நுவரெலியா, காலி மற்றும் களுத்துறை ஆகிய 5 மாவட்டங்களுக்கு இன்று நண்பகல் 2.00 மணி வரை விடுக்கப்பட்டிருந்த மண்சரிவு அபாய எச்சரிக்கையானது நாளை நண்பகல் 2.00 மணி வரைநீடிக்கப்பட்டுள்ளதாகஅறிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, அந்தப் பகுதிகளில் மண்சரிவு அபாய எச்சரிக்கை ஏற்படும் ஆபத்து உணரப்படுமாயின் உடனடியாக அங்கிருந்து மக்கள் அனைவரையும் வெளியேறுமாறும் தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் பொதுமக்களிடம் கேட்டுக் கொண்டுள்ளது.

## கருஞ்சிறுத்தை உயிரிழந்தது



கொழும்பு, மே 29

ஹற்றன் – நல்லதண்ணிப் பகுதியில் பொறியில் சிக்கி காயமடைந்த கருஞ்சிறுத்தை சிகிச்சை பயனின்றி இன்று உயிரிழந்தது.

நல்லதண்ணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட லக்ஸ்பான தோட்டத்தின் வாழைமலைப் பகுதியிலுள்ள மரக்கறி தோட்டமொன்றில் வைக்கப்பட்டிருந்த பொறியில் கருஞ்சிறுத்தை ஒன்று கடந்த செவ்வாய்க்கிழமை சிக்கியது.

இந்த கருஞ்சிறுத்தை தற்போதைக்கு இந்நாட்டில் வாழும் மிகவும் அரிய வகை இனமாகும்.

வனவிலங்குகள் அதிகாரிகள் கருஞ்சிறுத்தையை மயக்கமடையச் செய்து மீட்ட சந்தர்ப்பத்தில் அது காயமடைந்திருந்தது. அதற்கு சிகிச்சை அளிக்கப்பட்டதை அடுத்து அதன் உடல்நிலை தேறியது.

வனவிலங்குகள் திணைக்களத்திற்கு சொந்தமான உடவலயில் அமைந்துள்ள கால்நடை வைத்தியசாலைக்கு கருஞ்சிறுத்தை கொண்டு செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் சிகிச்சை பயனின்றி கருஞ்சிறுத்தை உயிரிழந்தது.

உலகில் வாழும் 8 சிறுத்தை இனங்களில் இலங்கை சிறுத்தை என அழைக்கப்படும் இந்த இனம் மிகவும் அரிதானதாகும்.

இதேவேளை, தோட்டத்தில் சட்டத்துக்குப் புறம்பாக பொறி வைத்த காணி உரிமையாளர் கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.


## மரண அறிவித்தல்



பிறப்பு: 02.03.1932 | இறப்பு: 28.05.2020

### திருமதி
### நவமணி வேலுப்பிள்ளை
(ஓய்வு பெற்ற ஆசிரியை)

கோப்பாயை பிறப்பிடமாகவும் ஆவரங்காலை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நவமணி வேலுப்பிள்ளை அவர்கள் நேற்று (28.05.2020) வியாழக்கிழமை அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் – சின்னபிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வைரவநாதன் – தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற வைரவநாதன் வேலுப்பிள்ளை அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, தர்மலிங்கம் மற்றும் சிவபாக்கியம், வேதநாயகி ஆகியோரின் அன்புச் சகோதரியும், பாலேந்திரா (கனடா), நாகேந்திரா, இராஜேந்திரா (மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகர், நல்லூர்), குபேந்திரா (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகாலக்ஷ்மி (கனடா), சிவாஜினி, சறோஜினிதேவி(கனடா) ஆகியோரின் அருமை மாமியாரும் தேவகி(கனடா), மகரன் (கனடா), கிஷோர், கானப்பிரியா, பானுஷா(கனடா), பவித்திரா(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29.05.2020) வெள்ளிக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிமையக்காக ஆவரங்கால் கரதடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொ.இல - 021 205 8077
077 226 3560

தகவல் - வே.இராஜேந்திரா(மகன்)
சிவன்வீதி,
ஆவரங்கால்,
புத்தூர்.


இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.05.2020 இல் வெளியிடப்பெற்றது.